Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, APRIL 11, 2022

திங்கட்கிழமை ஏப்ரல் 11, 2022 | ஒளி: 07 கதிர்: 279 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## இம்ரான் கானின் பதவி பறிபோனது

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் தோல்வி அடைந்ததையடுத்து, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், நேற்று (10) பதவி நீக்கம்

தொடர்ச்சி P2



ஆட்சியை மாற்றாமல் கட்டமைப்பை மாற்ற கோரினால்

## தெருத்தெருவாக போராடத் தயார்

■ எம்.றொசாந்த்

“ஆட்சியை மாற்றக் கோராமல், ஆட்சி கட்டமைப்பை மாற்றக் கோரி போராடினால் நாமும் தெருத்தெருவாக இறங்கி போராடத் தயார்” என யாழ் மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக

# விடாத மழையிலும் விடாது போராட்டம்

கொட்டும் மழையிலும் கோட்டாவை வீட்டுக்கு போகுமாறு கோஷம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரி மக்களால் சனிக்கிழமை (09) காலை 9 மணியளவில் கொழும்பு, காலி முகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், விடாத மழைக்கு மத்தியிலும் நேற்று (10) இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## சீரற்ற வானிலையால் மூவர் பலி

**8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை**

நாட்டில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற வானிலையால் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயமடைந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம், நேற்று (10) தெரிவித்தது.

தொடர்ச்சி P2



சர்வதேச நாணய நிதியத்தின்

## நிவாரணம் கிடைக்க நீண்ட காலம் செல்லும்

**இந்திய கடன் முடிந்ததும் சிக்கலில் சிக்குவோம் என்கிறார் ரணில்**

சர்வதேச நாணய நிதியத்தை அரசாங்கம் அணுகினாலும் எந்தவோர் அர்த்தமுள்ள நிவாரணம் வருவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்று தெரிவித்த முன்னாள் பிரதமரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க, நிதிச் சவால்களை கையாள்வதில் தற்போதைய அரசாங்கம் முற்றாகத் தோல்வியடைந்தமையால் மக்கள் நீண்ட வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



இலங்கையின் நிலை குறித்து

## அணிசேரா நாடுகளுக்கு விளக்கினார் பீரிஸ்

அணிசேரா நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்களை வெளிவிவகார அமைச்சில் சந்தித்த, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் அரசாங்கத்தின் பிரதிபலிப்புகள் தொடர்பில் அவர்களுக்கு விளக்கமளித்தார்.

தொடர்ச்சி P2



பிரதான நீர்த்தேக்கங்களில்

## நீர்மட்டம் 67 சதவீதமாக உயர்வு

பிரதான நீர்த்தேக்கப் பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான கடும் மழை பெய்ததன் காரணமாக, நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 67 சதவீதத்தால் உயர்ந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் கே.டி.என். சிறிவர்தன, நேற்று (10) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## இருவரைக் காவு வாங்கிய வரிசை

**இதுவரை அறுவர் பலி**

■ ரஸீன் ரஸ்மின்

தங்கொடுவ மற்றும் வென்னப்புவ பிரதேசங்களில் எரிபொருள் பெறுவதற்காக வரிசையில் நின்ற 47 மற்றும் 51 வயதுடைய இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## “கோட்டாவே வேண்டும்” ஆதரவு ஆர்ப்பாட்டம்



நாடளாவிய ரீதியில் “கோட்டாவே வீட்டுக்குச் செல்லுங்கள்” என்ற போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள், “எங்களுக்கு கோட்டா வேண்டும்” என ஆதரவு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ச்சி P2

## மஹிந்தவின் இராஜினாமாவை இருவர் தடுத்துவிட்டனர்



மஹிந்த ராஜபக்ஷவும் பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்திருந்த போதிலும், அமைச்சர்கள் இருவர், அதனை தடுத்துவிட்டனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடர்ச்சி P2

## லிட்ரோ நிறுவனம் விடுத்துள்ள அறிவிப்பு

நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக்கு அதிகமாக லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடளிக்குமாறு அந்த நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## 3 நாள்கள் மின்வெட்டு இல்லை

**புத்தாண்டு வாரத்தில் மின்வெட்டு சலுகை**

சித்திரைப் புத்தாண்டு தினங்களான 13,14 மற்றும் பெரிய வெள்ளி தினமான 15ஆம் திகதி ஆகிய தினங்களில் மின்வெட்டு அமல்படுத்தப்படமாட்டாது என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இன்று (11) முதல் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான மின்வெட்டு அட்டவணையை வெளியிட்ட ஆணைக்குழு மேற்குறிப்பிட்ட விடயத்தை அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை விடுத்துள்ள கோரிக்கைக்கு அமைய, மின்வெட்டுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி ஏப்ரல் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நான்கு மணித்தியாலங்களுக்கு மின்வெட்டு அமல்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரையான காலப்பகுதியில், 2 மணி நேரம் 15 நிமிடங்களும் மாலை 5.30 மணிமுதல் இரவு 10.45 மணிவரை 1 மணிநேரம் 45 நிமிடங்களுமே மின்வெட்டு அமலாகவுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வார இறுதி நாள்களான ஏப்ரல் 16, 17ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிக்கு இடையிலான காலப்பகுதியில், 2 மணி நேரம் 15 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமல்படுத்தப்படும் என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# தெருத்தெருவாக போராடத் தயார்

யாழ். மாநகரசபையில் நேற்று (10) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சமகால நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் கோரிக்கைகளுக்கு பதில் கிடைக்க வேண்டும். உலகம் முழுவதும் உள்ள அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெரும்பாலும் சமஷ்டியே இருக்கின்றது. இதனை சிங்கள ஆட்சியாளர்களும் சிங்கள மக்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஐரோப்பாவிலுள்ள நாடாக இருக்கட்டும். வட அமெரிக்க நாடுகளாக இருக்கட்டும். அனைத்து நாடுகளும் தங்களுடைய ஆட்சி கட்டமைப்பாக சமஸ்டியையே கொண்டுள்ளன. அதனால்தான் அவர்கள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றனர். அதனை தென்னிலங்கை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து இங்கு காசு வந்தால் உடனடியாக பயங்கரவாத தடுப்பு பிரிவு போய் விசாரிக்கிறது. இவ்வாறு இருந்தால் எவ்வாறு வெளிநாட்டிலிருந்து பணம் இங்கு வரும். எல்லாவற்றையும் இனவாத கண்ணோட்டத்துடன் பார்க்க முடியாது.

ஏராளமான புலம்பெயர்ந்த மக்களையும் அமைப்புகளையும் இலங்கையில் தடைசெய்துள்ளனர். அப்படி இருந்தால் எவ்வாறு அவர்கள் இங்கு முதலிடுவார்கள்.

ஆட்சி கட்டமைப்பும் அரசியல் யாப்பும் மாற்றப்பட வேண்டும். இனவாத செயற்பாடுகள் திருத்தப்பட வேண்டும். சிங்கள சகோதரர்கள் தங்கள் ஆட்சியாளர்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து இனப்பிரச்சினையை தீர்க்க ஒத்துழைக்க வேண்டும்.

நான் பெரிது நீ பெரிது என்று தமிழ் அரசியல்வாதிகள் போராடுவதை விடுத்து எல்லோரும் சர்வதேச சமூகத்திடம் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்களிடம் இலங்கைக்கு நிதி உதவி செய்யப் போவதாக இருந்தால் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையை வழங்கி விட்டு செய்யுங்கள் என்ற கோரிக்கையை வையுங்கள்.

சிங்கள மக்கள் ஆட்சியை மாற்ற கோரி போராடி வருகிறார்கள். ஆனால் தமிழர் பகுதிகளில் இந்தப் போராட்டங்கள் பெரிய அளவில் இடம் பெறவில்லை. ஆனால் சிங்கள மக்கள் ஆட்சியை மாற்ற கோராமல் ஆட்சி கட்டமைப்பை மாற்ற கோரி போராடினால் நாமும் தெருத்தெருவாக இறங்கி போராட தயார்" என்றார்.



# இருவரைக் காவு வாங்கிய வரிசை

தங்கொட்டுவ நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் சுமார் இரண்டு நாள்களாக டீசலுக்கு காத்திருந்த ஒருவர், சனிக்கிழமை இரவு (09) 7 மணியளவில் கீழே வீழுந்து தங்கொடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் செல்லும் பஸ் சாரதி என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பன்னல, கோனவில பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதுடன், அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மாரவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வென்னப்புவவில் எரிபொருள் கொள்வனவுக்காக வரிசையில் நின்ற 51 வயதுடைய மற்றொருவரும் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் காத்திருந்து உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "கோட்டாவே வேண்டும்" ஆதரவு ஆர்ப்பாட்டம்

கண்டி மற்றும் தங்காலையில் நேற்றையதினம் (10) ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கோட்டாவுக்கு ஆதரவாக, கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஆதரவு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விடாத மழையிலும் விடாது போராட்டம்

காலி முகத்திடல் மற்றும் ஜனாதிபதி செயலக வாயிலில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள், ஜனாதிபதிக்கு எதிராக வாசகங்களை உச்சாடனம் செய்ததுடன், பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

இனம், மத, மொழி பேதமின்றி ஒன்றுகூடிய போராட்டக்காரர்களுக்கு நீர், உணவு, பானங்கள் மற்றும் சிற்றுண்டிகளை பலர் தாமாக முன்வந்து வழங்கிக்கொண்டிருக்கின்றனர்.

காலிமுகத்திடல் வீதியில் இப்தார் நிகழ்வும் இடம்பெற்றதுடன், நோன்பு துறப்பதற்கு பலரும் ஆதரவு வழங்கியமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஜனாதிபதி செயலக வாயிலுக்கு முன்னால் கூடிய போராட்டக்காரர்கள் நள்ளிரவு தாண்டியும் கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்தனர்.

காலி முகத்திடலில் பலர் தற்காலிக கொட்டகைகளை அமைத்து தங்கியிருந்தமை மற்றும் உணவு தயாரிப்பில் ஈடுபட்டமை சமூக ஊடகங்களில் வெளியான படங்களின் மூலம் வெளிப்பட்டிருந்தது.

ஜனாதிபதி செயலக முன்றிலில் அலைபேசி சமிக்ஞைகளை செயலிழக்கும் ஜாமர்கள் பொருத்தப்பட்டிருந்த போதும், அவ்விடத்தில் படங்கள் மற்றும் காணொளிகளை எடுத்து, சற்று தொலைவுக்கு சென்று அவற்றை சமூக ஊடகங்களில், போராட்டக்காரர்கள் பதிவிட்டிருந்தனர்.

# இம்ரான் கானின் பதவி பறிபோனது

பாகிஸ்தானின் அடுத்த பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் பதவியேற்கவுள்ளார் என்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினால் அவரது பெயர் உத்தியோகபூர்வமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் முஸ்லீம் லீக்–என் தலைவர் ஷெபாஸ் ஷெரீப், நாட்டை வழிநடத்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சியால் முறைப்படி நியமனம் செய்யப்பட்ட நிலையில், புதிய பிரதமர் இன்று (11) தெரிவு செய்யப்படவுள்ளார்.

பல வாரங்களாக இடம்பெற்ற அரசியல் குழப்பத்தை தொடர்ந்து இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவாக 174 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர்.

அவரை பதவி நீக்கம் செய்ய எதிர்க்கட்சிக்கு வெறும் 172 வாக்குகள் தேவைப்பட்ட நிலையில், 342 ஆசனங்களைக் கொண்ட சபையில் பங்காளிகள் மற்றும் அவரது சொந்தக் கட்சி உறுப்பினர்களால் கைவிடப்பட்டு பெரும்பான்மையை இழந்தார்.

பாகிஸ்தானில் இதுவரை எந்தப் பிரதமரும் முழுப் பதவியில் இருந்ததில்லை என்றபோதும் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பின் மூலம் பதவியை இழந்த முதல் நபர் இம்ரான் கான் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நேற்று அதிகாலையில் வீதிகளில் இறங்கி, கார் ஜன்னல்கள் ஊடாக தேசிய மற்றும் கட்சிக் கொடிகளை அசைத்து வீதிகளில் ஆரவாரமிட்டனர்.



# அணிசேரா நாடுகளுக்கு விளக்கினார் பீரிஸ்

இதில் அரசியல் மற்றும் பொருளாதார அம்சங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சீர்திருத்தம், அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைக்கு தயாரிப்பு ஆகியவையும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

# நிவாரணம் கிடைக்க நீண்ட காலம் செல்லும்

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் திறமையின்மையால் நாட்டை ஆழமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதாக குற்றம் சுமத்தினார்.


2019இல் தாம் நாட்டை இயக்கும் போது பொருளாதாரம் ஆரோக்கியமான நிலையில் இருந்ததாகவும், ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் திறமையின்மை மக்களை வீதிக்கு இறக்கியுள்ளது என்றார்.

மோசமான பொருளாதார நிலைமை அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளது என்றும் நடப்பது நாட்டுக்கு பேரழிவு என்றும் தெரிவித்த அவர், இரண்டு ஆண்டுகளாக, இந்த அரசாங்கம் பொருளாதாரப் பிரச்சினைகளின் அனைத்து அறிகுறிகளையும் புறக்கணித்ததாகக் குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துக்கு நிவாரணம் பெற செல்லப் போவதில்லை என்ற விடயத்தில், தற்போதைய அரசாங்கம் உரிய நேரத்தில் தலையீடு செய்யவில்லை என கடுமையாக சாடினார்.

இந்தியாவினால் நீடிக்கப்படும் எரிபொருளுக்கான கடன் வரியானது மே மாதம் இரண்டாவது வாரம் வரை மட்டுமே நீடிக்கும் என தெரிவித்த அவர், அதன் பின்னர் இலங்கை கடும் சிக்கலில் சிக்க நேரிடும் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறும்போது மாற்று வழிகளைத் தேடுவதன் முக்கியத்துவத்தையும் முன்னாள் பிரதமர் வலியுறுத்தினார்.



# பிரதான நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் 67 சதவீதமாக உயர்வு

நீர் மட்டம் அதிகரிப்பதன் காரணமாக இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகளும், தெதுரு ஓயாவின் ஐந்து வான் கதவுகளும் அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எனவே, குருநாகல், புத்தளம், தெதுரு ஓயா, கலா ஓயாவைச் சூழவுள்ள தாழ்நிலப் பகுதிகளில் வசிப்பவர்கள் அவதானமாக இருக்குமாறும் எனினும் வெள்ள அபாயம் இன்னும் ஏற்படவில்லை என்றும் உறுதிப்படுத்தினார்.

தற்போதைய மழைவீழ்ச்சி தொடரும் பட்சத்தில், அநுராதபுரம், குருநாகல், பொலன்னறுவை ஆகிய பகுதிகளில் வான்கதவுகளை திறக்க அதிகாரிகள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்றார்.

நீர்மட்டம் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு நீர்நிலைகளில் குளிக்கும் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரித்துள்ளார்.

ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் மே முதல் வார இறுதி வரை பயிர்ச்செய்கையை தொடங்குமாறு பணிப்பாளர் நாயகம் விவசாயிகளை கேட்டுக் கொண்டார்.

# சீரற்ற வானிலையால் மூவர் பலி

கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் புலத்கொஹுபிட்டிய மற்றும் இம்புல்பே ஆகிய இடங்களில் மரங்கள் சரிந்து வீழ்ந்ததில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீரற்ற வானிலையால் ஒன்பது மாவட்டங்களில் 128 குடும்பங்களைச் சேர்ந்த 471 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 168 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் 39 வீடுகள் முற்றாக அழிந்துள்ளதாகவும், மேலும் 82 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் மத்தியநிலையம் தெரிவித்துள்ளது.

எட்டு மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தால் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, கொழும்பு, பதுளை, களுத்தறை, கண்டி, கேகாலை, மாத்தளை, குருநாகல் ஆகிய 8 மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் உருவாகியுள்ள கீழ் வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக, தற்போது நிலவும் மழையுடனான வானிலை மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இன்றையதினம் (11) மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சியும் தென் மாகாணத்தில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடும் என்றும் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# லிட்ரோ நிறுவனம் விடுத்துள்ள அறிவிப்பு

லிட்ரோ நிறுவனத்தினால் இதுவரையில் எரிவாயு விலை அதிகரிக்கப்படவில்லை எனவும் அவ்வாறான வர்த்தகர்கள் தொடர்பில் லிட்ரோ நிறுவனத்தின் 1311 என்ற இலக்கத்தை அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

3,900 மெற்றிக் தொன் எரிவாயு கப்பலொன்று மாலைதீவில் இருந்து சனிக்கிழமை (09) இரவு நாட்டை வந்தடைந்ததுள்ளதுடன், கப்பலிலிருந்து எரிவாயுவை தரையிறக்கும் பணி இடம்பெற்று வருகிறது.

லிட்ரோ நிறுவனத்தின் உற்பத்திகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகவும் நிறுவனத்தினால் நாளாந்தம் சுமார் 110,000 எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், நாட்டின் பல பகுதிகளில் எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு முன்பாக மக்கள் வரிசையில் காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மஹிந்தவின் இராஜினாமாவை இருவர் தடுத்துவிட்டனர்

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சகலரும், கடந்த 4 ஆம் திகதியன்று தங்களுடைய இராஜினாமா கடிதங்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்திருந்தனர்.


அதன்பின்னர், பிரதமருடன் அந்த அமைச்சர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது, தானும் பதவி விலகுவதற்கு தீர்மானித்துவிட்டதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட பிரசன்ன ரணதுங்க, ஜோன்ஸ்டன் பெர்னான்டோ ஆகிய இருவரும், இன்னும் சிலரும் இராஜினாமா செய்யவேண்டாம் என கடுமையான கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வார் எனின், அரசியலில் இருந்தே தாங்கள் ஓய்வு பெறுவோம் என அறிவித்துள்ளனர்.

அச்சந்தர்ப்பத்தில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய இராஜினாமா கடிதத்தை தயார் செய்திருந்தார் எனினும், கையொப்பமிடவில்லை.

இந்நிலையில், பிரதமர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது, விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, தனது முடிவை பிரதமர் மாற்றிக்கொண்டார் என்றும் அறியமுடிகின்றது.








அரசாங்கத்துக்கு எதிராக நேற்று முன்தினம் (09) சனிக்கிழமை காலை 9 மணிக்கு, பழைய பாராளுமன்ற கட்டடத்துக்கு முன்பாகவும் காலி முகத்திடலிலும் (கோல்பேஸ்) ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் நேற்றும் (10) தொடர்ந்தது.

## “நான் தப்பியோட மாட்டேன்”



நாட்டைவிட்டுத் தப்பியோடப் போவதில்லை எனத் தெரிவிக்கும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், தனக்கு எதிராகப் பல்வேறு கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிப்பேன் எனவும் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் பதவியிலிருந்து விலகியுள்ள அஜித் நிவாட் கப்ரால், நாட்டை விட்டு தப்பியோடுவார் என வதந்திகள் பரவிவந்த நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் போதும் அமைதியான, கண்ணியமான முறையில் நான் பதிலளித்துள்ளேன். இதனை அனைவரும் அறிவார்கள். எனவே, தற்போது எனக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளின் போதும் அவ்வாறேதான், நான் நடந்துகொள்ளப் போகிறேன்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 18ஆம் திகதி வரையில், நாட்டைவிட்டு வெளியேற அஜித் நிவாட் கப்ராலுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளதோடு, அன்றைய தினம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “எங்கள் கட்சி ஒத்துழைக்கும்”

■ *ரஸீன் ரஸ்மின்*

மக்களின் விருப்பத்துக்கு மதிப்பளித்து, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலக வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம், ஹூஸைனியா புரம் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதன்போது தொடர்ந்து உரையாற்றியஅவர், இந்த அரசாங்கத்தையும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவையும் ஆட்சியில் அமர்த்த வேண்டும் என்று 69 இலட்சம் மக்கள் வாக்களித்தனர்.

ஆனால், இன்று இந்த ஆட்சி மீதும், ஜனாதிபதி மீதும் நம்பிக்கையிழந்துள்ள மக்கள், நாட்டை ஆட்சி செய்வதற்கு ஜனாதிபதி தகுதியில்லாதவர்; எனவே அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று கோரியே வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர்.

இந்நாட்டின் பொருளாதாரம் பாரிய சரிவை எதிர்நோக்கியிருக்கிறது. மக்கள் ஒருவேளை உணவைக் கூட உண்பதற்கு போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருட்களை வரிசையில் காத்திருந்து கொள்வனவு செய்கின்ற நிலையும் காணப்படுகிறது.

ஆகவே, மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொடுக்க முடியாத ஜனாதிபதி, உடனடியாகப் பதவிவிலக வேண்டும் என்பதே இந்த நாட்டில் வாழும் அதிகமான மக்களின் விருப்பமாக இருக்கிறது. எனவே, மக்களின் விருப்பத்தை நிலை நாட்டுவதற்குத் தேவையான அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் எமது கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றார்.

### புத்தளத்தில் கடும் மழை;

## 5 வான்கதவுகள் திறப்பு

■ *ரஸீன் ரஸ்மின்*

தொடரும் கடும் மழையுடனான வானிலை காரணமாக ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் ஐந்து வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புத்தளம் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன்படி, ஐந்து வான் கதவுகளும் மூன்று அடி உயரத்தில் திறக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புத்தளம் அலுவலகத்தின் கடமை நேர அதிகாரி தெரிவித்தார்.

புத்தளத்தில் கடந்த மூன்று நாள்களாக மாலை வேளையில் கடும் மழை பெய்துகொண்டிருக்கும் நிலையில், தொடர்ந்தும் மழை பெய்தால் புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஏனைய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளும் திறக்க வேண்டி ஏற்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு, ஊவா, சப்ரகமுவ, மத்திய மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மருந்து தட்டுப்பாடு பேரழிவை ஏற்படுத்தும்



கட்டுப்பாடு விலைகளற்ற மருந்துப் பொருட்கள் அனைத்துக்கும் 20 சதவீத விலை அதிகரிக்கும் என தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் தலைவர் ரசித விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 310 ரூபாயாக அதிகரித்துள்ள நிலையில், மருந்து இறக்குமதியாளர்கள் நீண்டகாலமாக இந்த விலை அதிகரிப்பை கோரிவந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விலைக் கட்டுப்பாடுள்ள பொருட்களின் விலைகள் அதிகரித்திருந்த நிலையிலும் மருந்துப் பொருட்களின் விலைகள் மாத்திரம் அதிகரிக்கப்படவில்லை என இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளதோடு, 60 மருந்துப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டுமென வலுயுறுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டால் நாட்டில் பேரழிவு ஏற்படுமென நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

## பெட்றோலை உறிஞ்சிய நான்கு பேர் கைது

■ *துசித குமார டி சில்வா*

அளுத்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களில் பெட்றோலை திருடிவந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிறுத்தி வைக்கப்படும் தங்களது ஓட்டோக்களில் இருந்து, இரவில் பெட்ரோல் திருடப்படுவதாக அளுத்கம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்படியே நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நிறுத்தி வைக்கப்படும் ஓட்டோக்களில் இருந்து, பெட்றோல், ஓட்டோக்களின் உதிரிப்பாகங்களை இரவில் சூட்சுமமாக சந்தேகநபர்கள் திருடி வருவதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு திருடப்படும் பெட்றோலை விற்பனை செய்து அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு சந்தேகநபர்கள் போதைப்பொருட்களை வாங்குவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## வீட்டுக்குச் செல்ல வேண்டுமாயின் அரசியலமைப்பு எதற்கு?



ஜனாதிபதி வீட்டுக்கு செல்ல வேண்டுமென போராட்டங்களை முன்னெடுத்தால், நாட்டில் அரசியலமைப்பு எதற்கென முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு செல்ல வேண்டுமென மக்கள் போராடுகிறார்கள். அப்படியாயின் மற்றொரு ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து 6 மாதங்களில் பிரச்சினை ஏற்படும்போது, அவரையும் வீட்டுக்கு செல்ல வேண்டுமென கூறுவார்கள்.

இவ்வாறு செய்வதால் நாட்டில் வேறு வேலை செய்ய முடியாது. அப்படி என்றால் நாட்டில் தேர்தல் எதற்கு? அரசியலமைப்பு எதற்கு எனவும் அவர் இதன்போது வினவினார்.

இந்நிலை நாட்டில் தொடர்ந்தால், நாளை அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைவர்களை வீட்டுக்கு செல்ல வேண்டுமென தெரிவித்தும் போராட்டங்களில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவித்தார்.

## பதவி விலகிய அமைச்சர்கள் தொடர்பில் முக்கிய அறிவித்தல்



அரசாங்கத்திலிருந்து பதவி விலகியுள்ள அமைச்சர்கள் பயன்படுத்திய அரசாங்கத்துக்கு சொந்தமான இல்லங்கள், வாகனங்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்களை மீளப்பெற வேண்டுமென அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் திறைசேரி அறிவுறுத்தியுள்ளது.

திறைசேரியின் செயலாளராக அண்மையில் பதவி விலகிய எஸ்.ஆர். ஆட்டிகலே, தான் பதவி விலகுவதற்கு முன்னர் இது தொடர்பான சுற்றறிக்கையில் கையெழுத்திட்டுள்ளார்.

பொதுச்சொத்துகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக, அரசாங்கத்தின் அனைத்துப் பொதுசொத்துகளையும் பதிவு செய்தல் என்கிற தலைப்பில் இந்தச் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் என அனைவருக்கும் சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு

## ஒரு மாதம் போதும்



அரசாங்கத்துக்கு பெரும்பான்மை இல்லை என்பதைத் தெரிந்தே, அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் வாக்கெடுப்புக்கு விடவில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிடிய இராஜினாமா செய்திருந்தபோதிலும் அவரது இராஜினாமா கடிதத்தை ஏற்கமால், இம்மாத இறுதி வரையில் அவரை சமாதானப்படுத்தி அரசாங்கம் வைத்திருக்கிறது.

பாராளுமன்ற நிலையியல் கட்டளையின்படி, பாராளுமன்றத்தில் சபாநாயகர் அல்லது பிரதி சபாநாயகர் ஒருவர் பதவியிலிருந்து நீங்கும்போது, அவரை தெரிவு செய்வதற்கு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். எனவே, இதன்போதும் வாக்கெடுப்புக்கு முகங்கொடுக்க முடியாதென்பதாலேயே பிரதி சபாநாயகரின் இராஜினாமா கடிதத்தை அரசாங்கம் ஏற்கவில்லை.

ஜனாதிபதி இராஜினாமா செய்தால், பிரதமர் ஜனாதிபதியாக செயற்பட முடியும். அதுவும் ஒரு மாத காலத்துக்கு மாத்திரமே அவரால் ஜனாதிபதியாக இருக்க முடியும். அந்த ஒரு மாத காலத்துக்குள், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை எஞ்சிய காலத்துக்குள் ஜனாதிபதியாக நியமிக்க வேண்டும். இதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம்.

இதேவேளை ஜனாதிபதி இராஜினாமா செய்து, பிரதமர் ஜனாதிபதியாகும்போது அந்த ஒரு மாத காலத்துக்குள், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதுபோல, பாராளுமன்றமே அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும்.

தற்போது அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை இல்லை. எனவே, அரசாங்கத்துக்கு அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்ய முடியாது. அந்த அதிகாரம் பாராளுமன்றத்துக்கே இருக்கிறது. எவ்வாறாயினும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும். 2020ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்றமும் மக்களின் நம்பிக்கையை இழந்துள்ளது. எனவே பாராளுமன்றத்தையும் கலைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.


### தேவை

தொழில்முறை சமையல்காரர், சமையலாளர் தேவை. ஸ்ரீலங்கன், சைனிஸ் மற்றும் அரபிக் உணவு வகைகளை உண்மையாக சமைக்கத் தெரிந்தவராக இருத்தல் அவசியம். ஒரு வீட்டுக்கு 4 மணிநேரம்; சுத்தம் செய்ய 1 மணிநேரம். நாளொன்றுக்கு 2 சாப்பாடு சமைக்கவேண்டும். வெள்ளவத்தையில் வீட்டொன்றுக்கு தேவை. பெண்கள் மட்டும். 40 வயதுக்கு மேல், 0760326320, நாளொன்றுக்கு ரூ.1,500, ஒருவேளை சாப்பாடு.

# டீசலுக்காக வந்தவர் நசியுண்டு மரணம்

■ செந்தூரன் பிரதீபன்.

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலை பெறுவதற்கு நீண்ட வரிசையில் நின்றுகொண்டிருந்த, அச்சுவேலி, பத்தமேனி பகுதியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கனகரத்தினம் வயது (70) முன்னோக்கி நகர்ந்த லொறியில் நசியுண்டு உயிரிழந்துள்ளார்.

சிறு வீதியிலிருந்து பிரதான வீதிக்குள் நுழைவதற்கு நேற்றுக் (10) காலை 10 மணியளவில் முதியவர் முற்பட்ட வேளையில், டீசலுக்காக காத்திருந்த லொறி நகர்ந்ததால், சில்லுக்குள் நசியுண்டு முதியவர் உயிரிழந்துள்ளார்.



சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த அச்சுவேலி போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## ஐஸ் சிக்கியது

இராமேஸ்வரத்தில் இருந்து கடல் வழியாக, படகு மூலம் இலங்கைக்கு கடத்த முயன்ற ஒரு கோடி மதிப்பிலான ஐஸ் போதைப்பொருள் நேற்று முன்தினம் சனிக்கிழமை (9) கைப்பற்றப்பட்டது. போதைப்பொருள் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரை கைது செய்து விசாரித்து வரும் இராமேஸ்வரம் பொலிஸார், மேலும் ஒருவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

(ரொசேரியன் லெம்பட்)



## 1,200 குடும்பங்களுக்கு இடர்கால நிவாரணம்

■ ரொசேரியன் லெம்பட்

மன்னார் மாவட்டத்தில் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு, இடர்கால நிவாரணம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் நேற்று முன்தினம் (09) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களிலும் முதற்கட்டமாக 1,200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு இடர்கால நிவாரண உதவியாக சுமார் 3,500 ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொருட்களை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.





## நியமனக் கடிதங்கள் வழங்கி வைப்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில், பல நோக்கு அபிவிருத்தி செயலணியால் பல்வேறு அரச சேவை நிறுவனங்களில் வெற்றிடமாக இருக்கும் ஆரம்ப தர பதவிகளுக்கு, பல நோக்கு அபிவிருத்தி செயலணியின் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த பயிற்சியாளர்களை இணைத்துக்கொள்வதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

உதவிப் பணிப்பாளர் கப்டன் ஐ.சசிக்குமார் தலைமையில், மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.குணபாலன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு குறித்த நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

பிரதேச செயலர் பிரிவுகளின் அடிப்படையில், கரைதுறைபற்று-10, புதுக்குடியிருப்பு - 09, ஒட்டுசுட்டான் - 04, துணுக்காய் -06, மாந்தை கிழக்கு - 04, வெலிஓயா -18 பேர் என மொத்தமாக 51 பேர் பல்வேறு அரச திணைக்கள வெற்றிடங்களுக்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

## மார்ச் திருடியவர் ஏப்ரலில் சிக்கினார்

■ செந்தூரன் பிரதீபன்

அச்சுவேலி வடக்கு, கலாமினி திருமண மண்டபத்துக்கு பின்புறமாக உள்ள வீடொன்றில் இடம்பெற்ற திருட்டு தொடர்பில், ஒருவர் சந்தேகத்தில் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன், திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன என காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்தவர்கள், மார்ச் 9ஆம் திகதி, மட்டக்களப்புக்குச் சென்றருந்த வேளையில், வீட்டை உடைத்து, இரண்டு அலைபேசிகள், இரண்டு ஜோடி தோடு உட்பட வீட்டிலிருந்த உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, உப பொலிஸ் பரிசோதகர் கலா விநோதன் தலைமையிலான பொலிஸ் குழுவினர், அச்சுவேலி நகர் பகுதியைச் சேர்ந்தவரை ஏப்ரல் 8 ஆம் திகதியன்று சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர். களவாடப்பட்ட பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

## 16,211 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு போக நெற்செய்கை

விவசாயிகளின் அழுத்தம் காரணமாகவும் அண்மையில் மேலதிகமாக கிடைக்கப்பெற்ற மழையால் கிடைத்த நீர்மட்டத்தை கருத்தியும் விவசாயிகளின் சரியான நீர் முகாமைத்துவத்தை அடிப்படையாக கொண்டும் இரணை மடுக்குளத்தின் கீழ் 16,211 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு போக நெற்செய்கை மேற் கொள்ளப்பட உள்ளதாக மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான குறிப்பிட்ட சில விவசாயிகள் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அதன்பின்னர், அரச அதிபர் தலைமையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.



அதிலேயே மேற்கண்ட தீர்மானம் எட்டப்பட்டது.

அதிகளவான நிலப்பரப்புகளை கொண்ட விவசாயிகள், தங்கள் நீர் பங்குகளை அதிகரித்துத் தருமாறு கோரியிருந்தனர். அதற்கமைவாக மேலதிகமாக 426 ஏக்கர் இன்றைய தினம் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இரணை மடுக்குளத்தின் கீழ் 16,211 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

# பெண்களின் பங்கேற்பு தேவை

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

நாடெங்கிலுமுள்ள பெண்ணியவாதிகளின் 21 அமைப்புகளும் 47 பெண்ணிலை செயற்பாட்டாளர்களுமாக இணைந்து ஆட்சியாளர்களுக்கு அவசர வேண்டுகோள்களை முன்வைத்துள்ளனர்.

இலங்கையில் பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளே அதில் அடங்கியுள்ளன.

உணவு மற்றும் எரிபொருளுக்கான பரவலான தட்டுப்பாடுகள் மக்களின் வாழ்க்கையை முடக்கியுள்ளன. பெண்கள் இந்த நெருக்கடியை முன்நின்று முகம் கொடுத்து வருகின்றனர்.

இலங்கையின் பொருளாதாரம் பெண்களின் உழைப்பிலேயே பெருமளவு தங்கியுள்ளது. அதேசமயம், இலங்கையின் பொருளாதாரக் கொள்கையானது பெண்களின் உழைப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பெண்களின் பௌதீக நிலைமைகள், வளர்ச்சி, அபிலாஷைகள், சமூகத்தில் அவர்களது நிலை ஆகிய அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெண்களின் உழைப்பால் சேகரித்த செல்வம் வீணடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுரண்டலுக்கு எந்தவித பொறுப்புக்கூறலும் இல்லை. மாறாக, பொருளாதார நெருக்கடியின் சுமையை மீண்டும் பெண்கள் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தீர்மானம் எடுக்கும் ஆலோசனை வழங்கும் அமைப்புகளிலும்,



செயல்முறைகளிலும் பெண்களின் நேரடி ஈடுபாட்டை உறுதிப்படுத்துவது அவசியம். குறிப்பாகப் பெண்களின் பிரதிநிதித்துவம் இங்கு காணப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளது.



## காத்திருப்பல்ல; போராட்டம்

■ அ . அச்சுதன்

திருகோணமலை தபால் நிலைய நாற்சந்தி வீதியில் எரிவாயு விநியோகிக்கப்பட இருப்பதாக நேற்று முன்தினம் (09) மாலை வெளியான தகவலையடுத்து, அங்கு சென்ற மக்கள், பலமணிநேரம் காத்திருந்த போதும், எரிவாயு விநியோகம் இடம் பெறவில்லை.

சுமார் 3 மணிநேரம் காத்திருந்த மக்கள், வீதியின் குறுக்காக சிலிண்டர்களை வைத்து, அதில் ஏறியிருந்தும், சிலிண்டர்களை கிடத்திவிட்டு அதில் அமர்ந்திருந்தும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், இரவு எட்டுமணி வரையிலும் அவ்வீதியின் ஊடாக போக்குவரத்து முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

## கேஜி சிக்கியது

■ பாறுக் ஷிஹான்




இரண்டு கிலோ கிராம் கேரளா கஞ்சாவை கடத்திய குற்றச்சாட்டின் கீழ், சம்மாந்துறை இஸ்மாயீல் புரம் வளாத்தப்பிட்டி, பீச் றோட், பெரிய நீலாவணை, மருதமுனை ப் பிரதேசம் ஆகியவற்றைச் சேர்ந்த இருவர், கைது செய்யப்பட்டுள்ளனர் என பெரியநீலாவணை பொலிஸார் தெரிவித்தனர்.

மருதமுனை கடற்கரைப்பகுதியில் காத்தான்குடி பகுதிக்கு கேரள கஞ்சா சனிக்கிழமை (9) மாலை கடத்தப்பட உள்ளதாக களுவாஞ்சிக்குடி விஷேட அதிரடிப்படைக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இவ்விருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது கைது செய்யப்பட்டனர்.

40, 56 வயதான இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள், கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.



## கண்தானம் பரோபகாரிகளுக்கு பதிவுச்சான்றிதழ் வழங்கல்

■ வா.கிருஸ்ணா

கண்தானம் செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் மாணவர்களுக்கான உதவிகளும் வறியவர்களுக்கான உலர் உணவுப்பொருட்கள் வழங்கும் நிகழ்வும், நேற்று (10) நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி,வேலூரில் உள்ள சர்வதேச உளவியல்சார் கற்கைகள் நிலையத்தால் உளவியல் சார் கற்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளதுடன் சமூக செயற்பாட்டு நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கண்தானம் செய்வதற்காக தங்களை இலங்கை கண்தான சங்கத்தில் பதிவுசெய்து கொண்டவர்களுக்கான பதிவுச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சர்வதேச உளவியல்சார் கற்கைகள் நிலையத்தின் தலைவர் திருமதி தேவரஞ்சினி பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்களான செல்வி த.கௌரி, சிவலிங்கம், சுபராஜ், கிராம சேவையாளர் செ.பாக்கியநேசன், பொலிஸ் உத்தியோகத்தர் திருமதி விமலேஸ்வரி ஆறுமுகம், இலங்கை கண்தான சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சோ.திருமாறன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## நீண்ட வரிசை தொடர்கிறது

எரிபொருட்களை பெற்றுக்கொள்ள பொதுமக்கள் தொடர்ந்தும் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (10) எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்து நின்றனர்.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இன்னும் சில, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன.

(எச்.எம்.எம். பர்ஸான்)



## கோபுரத்தில் இருந்து 'கோட்டா கோ ஹோம்'

■ தீஷான் அஹமட்

திருகோணமலை, சேருநுவர நகர் பகுதியிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்தில் ஏறிய தனிநபர் ஒருவர், 'Gota go home' என்ற வாசகத்தை ஏந்தி, எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சேருநுவர பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் சுலோகங்களை ஏந்தி, கோஷங்களை எழுப்பி, அரசாங்கத்தின் மீதுள்ள எதிர்ப்பை நேற்றுமுன்தினம் (09) வெளிப்படுத்தியிருந்தனர். இதன்போது டயர்களை எரித்தும் எதிர்ப்பை



வெளிப்படுத்தினர்.

மணிக்கூட்டு கோபுரத்தில் ஏறியிருந்த நபர் கோட்டாபாய, பசில் ராஜபக்ஷர்களுக்கு எதிராகத் தமது கோசத்தை எழுப்பினார். மாலை 4.20 தான் ஆரம்பித்த எதிர்ப்பு போராட்டத்தில், மாலை 6.30 நிறைவு செய்துகொண்டு கோபுரத்தில் இருந்து இறங்கிக்கொண்டார்.

முதுகெலும்பு இல்லாதவர்களால்

# தீர்க்கமான முடிவு எடுக்க முடியாது



மலையக மக்கள் எதிர்நோக்கும் அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாமல், அரசாங்கத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாக இயங்கப் போவதாக கபட நாடகம் ஆடுகின்றவர்கள், தீர்க்கமான முடிவு எடுக்க முடியாத முதுகெலும்பு இல்லாதவர்கள் என்பதை நிரூபித்துள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது;

மலையக மக்களுக்காக 20 பேர்ச் காணி, ஸ்லப் போட்ட வீடு, 1,000 ரூபாய் சம்பளம், மலையகத்துக்கு பல்கலைக்கழகம் என்று கூறி ஏமாற்றி, கோட்டாபய அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக இருந்த ஜீவன், மக்களின் நலனுக்காக அரசாங்கத்தில் இருந்து இராஜினாமா செய்து விட்டதாக நாடகம் ஆடுவது வேடிக்கையாக இருகின்றது.


அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதோடு மாத்திரம் நின்று விடாமல், சுயாதீனமாக இயங்கப் போவதாகக் கூறியுள்ளமை சிந்திக்கத் தக்க விடயம் ஆகும்.

அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுவதாக இருந்தாலும், ஆதரவாக இருந்தாலும் ஒரே முடிவை எடுத்திருக்க வேண்டும். அதை விடுத்து சுயாதீனமாக இயங்குதல் என்றால், ஆளும் கட்சிக்கோ எதிர்க்கட்சிக்கோ பாதகமில்லாமல் இருதரப்புக்கும் பொதுவாக நல்ல பிள்ளையாக இருந்து கொள்வது என்று அர்த்தம் கொள்ள வைக்கின்றது.

அதன்படி, நாளைக்கே அமைச்சுப் பதைவியைப் பெற்றுக் கொள்ள அழைப்பு விடுத்தாலும் ஒட்டிக் கொள்ள மாட்டார்கள் என்று கூற முடியுமா என, அறிக்கையின் ஊடாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.











## ‘கோட்டாவாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது’

அரசாங்கத்துக்க எதிராக, நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் போராட்டமானது, நேற்றும் (10) மலையகத்தின் பல இடங்களில் கொட்டும் மழைக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் நேற்று மலையகத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், வணபிதாக்கள், பங்குத் தந்தையர்கள் என் பலரும் அமைதி வழி போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

(மலையக நிருபர்கள்)

# மாத்தளை கற்குவாரியில் மண்சரிவு

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை பிரதேசத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக, மாத்தளை-வட்டகொட பிரதான வீதியின் அமைந்துள்ள கற்குவாரியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதுடன், கற்கள் சரிந்து வருவதால் குறித்த வீதியுடனான போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இப்பகுதியில் கற்கள் சரிந்து வருவதால், வீதி மூடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு, மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாலக பண்டாரவால் சம்பந்தப்பட்ட பிரிவினரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதற்கமைய அனர்த்தக முகாமைத்துவ மத்திய நிலையம், பிரதேச செயலகம், பொலிஸார், பிரதேசவாசிகள் இணைந்து வீதியில் உள்ள கற்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





## ஆதரவு ஆர்ப்பாட்டம்

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்‌ஷ மற்றும் அரசாங்கத்தை ஆதரித்து, நேற்று (10) கண்டி நகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கண்டி மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகாமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (மொஹொமட் ஆஸிக்)



## சுத்திகரிப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்

■ மலைவாஞ்ஞன்

தும்புறுகிரிய பிரதேசத்தில் சுத்திகரிப்பு பணியில் ஈடுபடும், ஹட்டன் டிக்கோயா நகர சபையின் சுத்திகரிப்பாளர்களை ஹட்டன், தும்புறுகிரிய அபிவிருத்தி சங்கம் நேற்று (10) கௌரவித்தது.

அத்துடன், அவர்களுக்கு புத்தாண்டினை முன்னிட்டு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த உணவுப் பொருட்களுக்கான அனுசரனையை பிரதேசத்தில் உள்ள வர்த்தக பிரமுகர்கள், நலன் விரும்பிகள் வழங்கியிருந்தனர்.

தும்புறுகிரிய அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் ஜெயராம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, கல்வி அமைச்சின் பணிப்பாளரும் கவிஞருமான சு.முரளிதரன், ஹட்டன் கல்வி வலயத்தின் முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் மெய்யநாதன், தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் உதவி பணிப்பாளர் சத்திவேல் உட்பட வர்த்தகர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்கின்றது

### பொறியியலாளர்கள் தெரிவிப்பு

■ மலைவாஞ்ஞன்

மத்திய மலைநாட்டில் கடந்த சில மாதங்களாக வரட்சியான வானிலை நிலவியதால், நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் என்றும் இல்லாத அளவு குறைவடைந்தது.

சில பிரதேசங்களில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டது. நீர் மின் உற்பத்தியும் பாரிய அளவில் வீழ்ச்சி கண்டது. இந்நிலையில் நீரேந்து பிரதேசங்களிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்று (10) காலை முதல் மழை பெய்துவருகின்றது. இவ்வாறு பெய்து



வரும் மழையால் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம், சுமார் 3 அடி வரை உயர்வடைந்து இருப்பதாகவும் மழை வீழ்ச்சி எதிர்வரும் காலங்களில் அதிகரிக்குமானால் நீர்மட்டம் மேலும் உயர்வடையக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் இதனால் மின்உற்பத்தி நடவடிக்கைகளும் அதிகரிக்கக் கூடும் எனவும் இதனால் மின்துண்டிப்பு குறைவடையலாம் என மின்சாரசபை பொறியியலாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

நிவாரணப் பொதியைப் பெற

# முண்டியடித்த மக்கள்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

சதொச நிறுவனத்தால் வழங்கப்படும் நிவாரணப் பொதியைப் பெற, அதிகளவானோர் ஹட்டன் சதொச விற்பனை நிலையத்தில் காத்திருந்தனர்.

நேற்றிலிருந்து குறித்த நிவாரணப் பொதி வழங்கப்பட்டு வருவதாகவும் இந்த நிவாரணப் பொதியில் நாட்டரிசி 5 கிலோ கிராம், சம்பா அரிசி 5 கிலோ கிராம், ஹைலன்ட் பால் மா 400 கிராம் பெக்கட் ஒன்று, 1 கிலோ கிராம் சீனி, தேயிலை 100 கிராம் என்பன உள்ளடங்குவதாகவும் ஹட்டன் சதொச நிலைய முகாமையாளர் தெரிவித்தார்.



அத்துடன், இந்த நிவாரணப் பொதி 1,950 ரூபாய்க்கே வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.




## வீட்டுப் பணிப்பெண்களும் வீதிக்கு இறங்கினர்

■ இரா.யோகேசன்

‘ப்ரோடெக்ட்’ சங்கமானது, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வு மற்றும் அரசியலில் ஸ்திரத் தன்மையின்மை போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கினிகத்தேனையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்தினம் (9) மேற்கொண்டது.

வீட்டு பணிப்பெண்களாக இருப்பவர்கள், இக்காலக்கட்டத்தில் பல்வேறு வகையிலும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதாக தெரிவித்தே மேற்படி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டம் தொடர்பாக, ‘ப்ரோடெக்ட்’ அமைப்பின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் கருப்பையா மைதிலி கருத்துத் தெரிவித்த போது,

‘ப்ரோடெக்ட்’ அமைப்பில் கூடுதலாக இருப்பது நாளாந்த கூலிவேலை செய்பவர்களாவர். தற்போது விலைவாசி உயர்வோடு, இன்னும் பல்வேறு பிரச்சினைகளால் சிரமங்களை சந்திக்கின்றனர். இதன் காரணமாக, அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டும். தற்போது பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்களின் பிரச்சினைகளை பேச வேண்டும். ஆனால், மேற்படி ஒன்றும் தற்போது இடம்பெறாததால், பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கின்றனர்.

இன்று, பொதுமக்கள் வீதிக்கு இறங்கியிருப்பது பணத்தைக் கேட்பதற்காகவல்ல; அத்துடன் இன்று அரசாங்கம் பல்வேறு நாடுகளில் கடன்பட்டுள்ளது. மேலும், சர்வதேச நாணயநிதியத்தில் கடன்படுவதற்கும் எதிர்பார்த்துள்ளது. எனவே அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள், சொகுசு வாழ்க்கை வாழ, ஏன் நாம் எமது பரம்பரையே கடன் செலுத்த வேண்டும்.

ஆனால், பாராளுமன்றத்தில் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு யாரை நியமிப்பது என்று வாதங்கள் நிலவுகின்றன. ஆனால், மக்களுடைய உண்மையான பிரச்சினைகளை பேசுவதற்கு யாரும் தயாரில்லை.

அத்துடன் நாட்டில் ஊழல் தலைவிரித்தாடுகின்றது. அதைப் பற்றிப் பேசுவதற்கு யாரும் தயாரில்லாத நிலையிலே இருக்கின்றனர். எனவே இவர்கள் கேட்காததன் காரணத்தினால்தான் இன்று மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். எனவே, மக்கள் வாக்களித்த 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் பிரச்சினைகளை செவிமெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# ஸ்திரம் இல்லையேல் கையேந்துவதிலும் பிரயோசனம் இல்லை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிரான கோஷங்கள், நாளுக்கு நாள் உரக்கக் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. கொட்டும் மழைக்கு மத்தியிலும், இராப்பகல் பாராது பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். எவ்விதமான பேதங்களுமின்றி, மூவினங்களைச் சேர்ந்தவர்களும் ஓரணியில் திரண்டிருப்பது விசேட அம்சமாகும்.

வீட்டில் இருக்க வேண்டிய வயதில், முதியவர்களும் விளையாட வேண்டிய காலத்தில் சிறுவர்களும் போராட்டங்களில் பங்கேற்றுள்ளனர். இன்னும் சிலர், கைக்குழந்தைகளை தூக்கிவந்து போராட்டத்தில் குதித்துள்ளனர். ஆக, அரசாங்கத்தின் தவறான கொள்கைகளால், ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையே ஆர்ப்பாட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஆனால், பொருட்களின் விலைகளும் எரிபொருட்களின் விலைகளும் இன்னும் அதிகரிக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. நிதியமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ரொய்ட்டர் செய்தி சேவைக்கு வழங்கியிருக்கும் பேட்டியில் கூறப்பட்டவை, மக்களிடத்தில் ஆத்திரத்தை தூண்டிவிட்டுள்ளன.

ஒரு குடும்பத்துக்குள் சதாகாலமும் சண்டை ஏற்படுமாயின், அயலவர்களிடம் கூட கடன் கேட்கமுடியாது. ஏனெனில், கடனை திரும்பப் பெற முடியாதென நினைத்து கையை விரித்துவிடுவர். நமது நாட்டைப் பொறுத்தவரையில், ஸ்திரமான ஆட்சியொன்று இல்லை.

அமைச்சரவையே இராஜினாமா செய்து, ஒருவாரம் கடந்துவிட்டது. நான்கு அமைச்சர்களைக் கொண்டு தற்காலிக அமைச்சரவை நியமிக்கப்பட்டது. அதில் நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட அலி சப்ரி, நிதியமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார். அதை, ஜனாதிபதி ஏற்காமையால் தொடர்ந்து அப்பதவியிலேயே இருக்கின்றார்.

நிதியமைச்சரான அலி சப்ரியின் பேட்டியில், "ஆறு மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களுக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர் தேவை. வரிகளையும் எரிபொருட்களின் விலைகளையும் உயர்த்தவேண்டிய தேவை உள்ளது. இன்னும் 500 மில்லியன் டொலர் இந்தியாவிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியா, சீனா, மேற்குலக நாடுகள், அமெரிக்கா, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவற்றிலிருந்து கடனுதவி எதிர்பார்க்கப்படுகின்றது" எனத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் ஏன், 225 உறுப்பினர்களையும் வீட்டுக்குச் செல்லுமாறு மக்கள் குரல் எழுப்பிக்கொண்டிருக்கின்றனர். முறையான அமைச்சரவை இல்லை; ஆட்சி ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணையும் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையும் கொண்டுவர தீர்மானித்துள்ள எதிர்க்கட்சிகள், கையொப்பங்களை திரட்டுகின்றனர்.

நாட்டின் ஆட்சி ஸ்திரமின்றி இருக்கின்றது. இந்நிலையில், எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கமோ அன்றேல் அமைப்புகளோ உதவி செய்வதற்கு முன்வரா! அவர்களின் மனங்களை வெல்லவேண்டுமாயின், நாட்டில் ஸ்திரமான ஆட்சியொன்றுக்கு வழிசமைக்க வேண்டும். இல்லையேல் மக்களின் மீதான சுமை, அதிகரித்துக்கொண்டே செல்லும்.

விழுந்துகொண்டிருக்கும் பொருளாதாரக் கட்டமைப்பை தடுப்பிட்டு முதலில் நிறுத்தவேண்டும். அதன்பின்னர், அக்கட்டமைப்பை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, சகலரினது மனங்களிலும் திருப்தியை ஏற்படுத்த வேண்டும். அதனூடாகவே உதவியை எதிர்பார்க்க முடியும். அரசியல் ஸ்திரமில்லையேல், பொருளாதாரத்தை தூக்கிநிறுத்துவது குதிரைக் கொம்பாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஒருவரிடம் அவசரத் தேவைக்காகக் கடன்வாங்கி, அதைத் திருப்பிக் கொடுப்பதற்குக் காலதாமதம் செய்தால், அதையே சாதகமாக்கி, கடன்கொடுத்தவர் அடிக்கடி வேலை வாங்கியபடி இருப்பதுண்டு. ஆளை அறிந்து உதவிகேட்க வேண்டும்.

இதை உணர்ந்த நபர், ஆளைவிட்டால் போதும் என்று, அவரிடம் வேண்டிய கடனை உடன் அடைத்துவிட்டு, அவரிடமிருந்து விலகியே விடுவார். சிலர், எளியவர்கள், ஏழைகளை அவமானப்படுத்துவதுண்டு. இது அவர்களுக்கு இஷ்டமான பொழுதுபோக்காகும். இந்தக் குணம் கொடூரமானது.

உலகில் எல்லாவிதமான குணங்களுடனும் மனிதர்கள் வாழ்கின்றார்கள். இதனால் முரண்படுதல், விலகுதல் என்பவை அர்த்தமற்றவை. இது பற்றிய கவலையை விட்டுவிட வேண்டும்.

யாரையும் ஒரே பார்வையில் நேயத்துடன் பார்த்தால், அதன் பாரிய சக்தியால் உலகம் உங்களை விரும்பும்; உலகம் உங்களை வரவேற்கக் காத்திருக்கிறது.

எமது கோபக்காரர் என்று நாம் நினைக்கும் எனது அயலவர்கள், எங்களுக்கு நேரும் கஸ்டங்களைக் கண்டால், அவர்கள் தான் முன்னின்று, எமக்கு உதவிபுரிய ஓடோடி வருவது இயற்கை. இரங்குதல் மனித இயல்பு. எனவே பகைமையை அழித்திடுக.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அம்பாறையில் மீன்பிடித் தொழில் பாதிப்பு

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, அம்பாறை மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, கடற்றொழிலாளர்கள் தமது தொழிலை மேற்கொள்வதற்கு மண்ணெண்ணெய், பெற்றோல் என்பவற்றை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கொள்கலனில் எரிபொருள் விநியோகிப்பது, சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு, கொள்கலன்களில் பெற்றோல், மண்ணெண்ணெய் என்பன விநியோகிக்காத காரணத்தால், மீனவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்கு எரிபொருள் வழங்கப்படுவதைப் போன்று, மீனவர்களுக்கும் கொள்கலன்களிலேயே பெற்றோல், மண்ணெண்ணெய் என்பன வழங்க வேண்டுமென அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், கல்முனைப் பிராந்திய கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆகியோரிடம் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களாக, கிழக்கு பிராந்திய கடற்பரப்பில் ஏற்பட்ட சீரற்ற வானிலை மற்றும் கடற்கொந்தளிப்பு காரணமாக, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஆழ் கடல் மீன்பிடித் தொழில், தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது என்பது கவனத்தில் எடுத்து, நிவர்த்தி செய்யப்பட வேண்டிய விடயமாகும்.

எம்.எஸ்.எம். ஹனீபா

கோட்டாவின்

# விடாப்பிடி கொடாப்பிடி



என்.கே. அஷோக்பரன்

இலங்கை, வரலாறு காணாத மக்கள் எழுச்சியை சந்தித்து நிற்கிறது. பணம், சாராயம், பிரியாணிப் பொட்டலம் கொடுத்து, பஸ்களில் ஆட்களை ஏற்றிவந்து, அரசியல் கட்சிகள் நடத்தும் 'எழுச்சி'கள் போலல்லாமல், மக்களால், மக்களுக்காக, மக்கள் எழுந்துநிற்கும் மாபெரும் எழுச்சியை, கடந்த இரண்டு வாரங்களாக, இலங்கை கண்டுவருகிறது.

இந்த மக்கள் எழுச்சியின் குரல் ஒன்றுதான்; "கோ ஹோம் கோட்டா" (கோட்டா வீட்டுக்குப் போ), "கோ ஹோம் ராஜபக்ஷஸ்" (ராஜபக்ஷர்கள் வீட்டுக்குப் போங்கள்).

2009 - 2015 காலப் பகுதிகளிலெல்லாம் 'கோட்டா' என்ற பெயர், அச்சத்தைத் தருவதாக இருந்தது. மஹிந்த ராஜபக்ஷவை கடுமையாக விமர்சித்த பலரும் கூட, கோட்டாபய ராஜபக்ஷவைப் பற்றி அடக்கியே வாசித்தனர்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில், கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட்ட போது, நாட்டைக் காக்க வந்த வீரனாகவே, சிங்கள-பௌத்த மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவைப் பார்த்தனர். சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில், கோட்டாபயவின் வெற்றி அவர்களுக்கு மேலும் அச்சத்தைத் தருவதாகவே அமைந்தது.

மக்கள் மத்தியில் இருந்த இத்தகைய எண்ணங்கள், இரண்டே வருடங்களில் தலைகீழாக மாறிவிட்டன. எந்த 'கோட்டா' எனும் பெயரை உச்சரிக்கவே, எவரும் அச்சப்படும் ஒன்றாக ஒரு காலத்தில் இருந்ததோ, அந்தப் பெயரில் பச்சைத் தூசணப் பாடல்களைக் கூடப் பாடிக்கொண்டு, பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடக்கும் நிலை இன்று உருவாகியிருப்பதை நாம், கண்கூடாகப் பார்த்து, காதுகொண்டு கேட்கக் கூடியதாக இருக்கிறது.

இது போன்றதோர் இழிநிலையை, இலங்கையின் வேறெந்த அரசியல்வாதியும் இதற்கு முன்னர் சந்தித்ததில்லை. 'மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை பீடழிய வந்த இடத்து' என்பான் வள்ளுவன்; ஆனால், மானம் உடையவர்களுக்கே இது பொருந்தும்.

வரலாறு காணாத மக்கள் எழுச்சியின் காரணமாக, எதையாவது செய்ய வேண்டும் என்ற அழுத்தம் அரசாங்கத்துக்கு அதிகரிக்கவே, பிரதமரைத் தவிர்ந்த ஏனைய அமைச்சரவை அமைச்சர்கள் எல்லோரும் பதவியை இராஜினாமாச் செய்தனர்.

அதன் பின்னர், வெறும் நான்கு அமைச்சர்கள் மீளவும் அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டனர். இதில் நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட அலி சப்ரி, அடுத்தநாளே தன்னுடைய இராஜினாமாக் கடிதத்தை அனுப்பியிருந்ததோடு, தனது இராஜினாமாவைப் பகிரங்கப்படுத்தி இருந்தார். ஆனால், அதற்கடுத்த நாள்களிலேயே, தான் நிதியமைச்சராகத் தொடர்வதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சிகளை வந்து, அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்று, ஆட்சி நடத்துமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினர் மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்துக்கொண்டிருந்தனர். எல்லா அழைப்புகளும் இதுவரை மறுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. காரணம், மக்களின் பலமான குரலாகும்.

மக்கள் இங்கு கேட்பது, ஒரு புதிய அமைச்சரவையையோ, இடைக்கால அரசாங்கத்தையோ அல்ல. மக்களின் முதன்மையான கோரிக்கை, மிகத் தெளிவானது; பட்டவர்த்தனமானது. அது "கோ ஹோம் கோட்டா" (கோட்டா வீட்டுக்குப் போ), "கோ ஹோம் ராஜபக்ஷஸ்" (ராஜபக்ஷர்கள் வீட்டுக்குப் போங்கள்).

ஆனால் கோட்டா, தன்னுடைய பதவிக் கதிரையை உடும்புப்பிடி பிடித்தபடி, அதனை விட்டுக்கொடுக்கத் தயாரில்லாது, அதனைத் தவிர்ந்த உப்புச்சப்பற்ற முயற்சிகளை, முன்மொழிந்து கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்த நிலையில், எதிர்க்கட்சிகள் குழம்பிக்கொண்டு நிற்கின்றன என்பது கவலைக்கிடமானது. இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, அரசியல் முதிர்ச்சியற்ற தன்மைகளை வெளிக்காட்டி நிற்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை இல்லாதொழித்துவிட வேண்டும் என்கிறார். கட்சியின் இன்னொரு முக்கிய தலைவராக ஹரின் பெர்னாண்டோ, கட்சியின் இன்னொரு முக்கியஸ்தரான பொருளியல் கலாநிதி ஹர்ஷ டி சில்வா ஜனாதிபதியாக வேண்டும் என்கிறார்.

எதிர்க்கட்சிகளை எல்லாம் ஒன்றாக இணைத்து, செயற்பட வைக்க வேண்டிய பிரதான எதிர்க்கட்சி, திக்குத் தெரியாமல் நிற்கிறது. பாராளுமன்றத்தின் பெறுமதியான நேரத்தை வீணாக்கும் வகையில், பாராளுமன்றத்துக்கு உள்ளேயே ஆர்ப்பாட்டம் என்ற கேவலமானதொரு நாடகத்தை நடத்தி, எதிர்க்கட்சியின் இயலாமையை மீண்டும் ஒருமுறை பறைசாற்றி நின்றனர் ஐக்கிய மக்கள் சக்தியினர்.

மறுபுறத்தில், இன்று ஏற்பட்டிருக்கும் மக்கள் எழுச்சியை, ஜே.வி.பி தனக்கு சாதகமாக்கிக்கொள்ள முனைவதோடு, பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மறுதேர்தலை நோக்கியே தனது காய்களை நகர்த்துவதாகத் தெரிகிறது. பிரதான எதிர்க்கட்சி பலமிழந்துள்ள நிலையில், தனது அரசியல் பலத்தை அதிகரித்துக் கொள்வது மட்டுமே அதன் குறிக்கோளாகத் தெரிகிறது. அதே அறப்பழசான, காலத்துக்கு ஒவ்வாத மார்க்ஸிய பொருளாதாரச் சிந்தனையை வைத்துக்கொண்டு, ஜே.வி.பியால் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

> இந்தப் பொருட்கள் தட்டுப்பாடுகளும் மின்வெட்டும் நோயல்ல; நோயின் அறிகுறிகள் மட்டும்தான்

இந்த இடத்தில், இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினை பற்றியும், அதற்கான தீர்வுப் பாதை தொடர்பிலும் தெளிவான பார்வையோடு கருத்துரைத்தவர் ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான். ஐக்கிய தேசிய கட்சி சார்பில், ஒற்றையாளாக அவர் பாராளுமன்றத்தில் நின்றுகொண்டு, நிறையவே ஆக்கபூர்வமான கருத்துகளை முன்வைத்தாலும், எண்ணிக்கைப் பலம் தற்போது இல்லாத நிலையில், அவரது செயலாற்றல் இயலுமை மட்டுப்படுத்தப்பட்டே உள்ளது.

எதிர்க்கட்சிகளின் இந்தப் பலவீனம்தான், ராஜபக்ஷர்களின் இன்றைய பெரும் பலம். மக்கள் வீதியில் இறங்கிப் போராடினாலும், அந்தப் போராட்டத்தின் பலனை, அரசியல் வெற்றியாகக் கொண்டு போய்ச் சேர்க்கக்கூடிய அரசியல் சக்திகள் எதுவுமே இல்லாத நிலைதான், இன்று கோட்டாபய ராஜபக்ஷ தன் பதவிக் கதிரையை இறுகப்பிடித்துக்கொண்டு நிற்பதற்குக் காரணமாக இருக்கிறது.

எப்படியாவது குறுங்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தோ, இந்தியா, சீனா உள்ளிட்ட வெளிநாடுகளிடமிருந்தோ பெரியதொரு கடனைப் பெற்றுக்கொண்டு, எரிபொருள், உணவு, மருத்துவப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை மக்களுக்கு தாராளமாகக் கிடைக்கச் செய்துவிட்டால், மின்வெட்டுக்கான தேவை இல்லாது போய்விட்டால், எரிவாயு வரிசைகள் இல்லாது போய்விட்டால், மக்களின் எதிர்ப்புக் குறைந்துவிடும் என்பதுதான், கோட்டாவின் கணக்காக இருக்க வேண்டும்.

இந்தக் கணக்கின் படிதான், வரலாறு காணாத மக்கள் எழுச்சியை மீறி, கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிக் கதிரையை விடாப்பிடி, கொடாப்பிடியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

மேலும், "கோ ஹோம் கோட்டா" (கோட்டா வீட்டுக்குப் போ), "கோ ஹோம் ராஜபக்ஷஸ்" (ராஜபக்ஷர்கள் வீட்டுக்குப் போங்கள்) என்ற கோசங்களை, பாராளுமன்ற உறுப்பினர்களான "225 பேரும் வீட்டுக்குப் போங்கள்" என மாற்றும் கைங்கரியத்தையும் போராட்டக்காரர்கள் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல்வாதிகளுக்கு எதிரான, மக்களின் மனநிலை என்பது நியாயமானது. ஆனால், கோட்டாபயவுக்கும் ராஜபக்ஷர்களுக்கும் எதிரான மக்களின் கோபத்தை, 225 பேரை நோக்கி வழிமாற்றிவிடும் முயற்சியானது, மக்களை ஏமாற்றும் செயலாகவே பார்க்கப்பட வேண்டும். ஆகவே, இந்தப் போலிப் பரப்புரைகளை மக்கள் கவனத்தோடு அணுக வேண்டும்.

இந்த இடத்தில், மக்கள் புரிந்துகொள்ள வேண்டியதொரு விடயம் இருக்கிறது. எரிபொருள், எரிவாயு, உணவு, மருந்துப் பொருட்கள் ஆகியவற்றின் தட்டுப்பாடும், மின்வெட்டும்தான் மக்களை வீதிக்கிறங்கி போராட வைத்தது. இவை நடந்திருக்காவிட்டால், ஆட்சி எவ்வளவு ஊழல் மிக்கதாக இருந்தாலும், எவ்வளவு மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்திருந்தாலும் இந்தளவுக்கு மக்கள் வீதிக்கு இறங்கி போராடியிருப்பார்களா என்பது சந்தேகமே.

ஆனால், இந்தப் பொருட்கள் தட்டுப்பாடுகளும் மின்வெட்டும் நோயல்ல; நோயின் அறிகுறிகள் மட்டும்தான். கோட்டாபயவும், இந்த அறிகுறிகளைக் குணப்படுத்திவிட்டு, மக்களை சமாதானம் செய்துவிட்டு, தனது பதவிக் கதிரையில் வசதியாகத் தொடர்ந்து அமரவே முயல்கிறார்.

ஒருவேளை, தன்னுடைய பகீரதப் பிரயத்தனத்தில் கோட்டாபய வெற்றிபெறுவாராக இருந்தால், மேற்சொன்ன நோயின் அறிகுறிகள் மறைக்கப்படும். அறிகுறிகள் மறைந்ததும், மக்கள் எழுச்சி குறைவடையும். கோட்டாபய தனது பதவியைக் காக்கும் பெரு முயற்சியில் வெற்றிபெறுவார். ஆனால், இந்நாட்டை பீடித்துள்ள நோய் குணமடையுமா?

ஒரு பெரிய அரசியல் மாற்றத்துக்கான தருணம் இது. இலங்கையின் அரசியல் அமைப்பை மட்டுமல்ல, அரசியல் கலாசாரத்தையும் மாற்றிப் போடுவதற்கான காலகட்டம்; அரிய சந்தர்ப்பம் இது.

இந்த வரலாறு காணாத மக்கள் எழுச்சி, பயனற்றுப் போய்விடக்கூடாது என்பதைப் புரிந்துகொள்வது அவசியம். இத்தனை பெரிய எழுச்சி என்பது, வெறும் நோயின் அறிகுறிகளை மறைப்பதற்கானது அல்ல; அது நோயைக் குணப்படுத்துவதற்கானது என்பதை, மக்கள் தமக்குத் தாமே ஞாபகப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.



அல்ஃபா அப்பரல்சுக்கு

# 2021 தேசிய வியாபார சிறப்பு விருது

அல்ஃபா அப்பரல்ஸ், தேசிய வியாபாரச் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வில், ஆடை உற்பத்தி மற்றும் லெதர் தயாரிப்புகள் உற்பத்திப் பிரிவின் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தால் (NCCSL) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வர்த்தக சிறப்பு விருதுகள் 2021 இல் இந்தக் கௌரவிப்பை அல்ஃபா அப்பரல்ஸ் பெற்றுக் கொண்டது.

அல்ஃபா அப்பரல்ஸ் ஆடை உற்பத்தித் துறையிலும் பொருளாதாரத்திலும் காண்பிக்கும் அர்ப்பணிப்பு மற்றும் எழுச்சியை மீள உறுதி செய்யும் வகையில் இந்தச் சாதனை அமைந்துள்ளது. கடந்த ஆண்டின் இறுதியில், ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வழங்கும் 24 ஆவது நிகழ்வில், 2019/20 ஆம் ஆண்டு காலப்பகுதியின் 'நடுத்தர" பிரிவில் 'சிறந்த ஆடை உற்பத்தி ஏற்றுமதியாளர்' எனும் கௌரவிப்பையும் பெற்றுக் கொண்டது.

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி பொருளாதாரத்தில் பெருமளவு பங்களிப்பு வழங்குவதில் முன்னோடியாக ஒமெகா லைன் குழுமத்தின், அல்ஃபா அப்பரல்ஸ் திகழ்கின்றது. நிறுவனத்தின் சகல உள்நாட்டு இணை நிறுவனங்கள் மத்தியில் 13,000 க்கும் அதிகமான மொத்த பணியாளர்களைக் கொண்டுள்ளதுடன், பல சவால்களுக்கு மத்தியிலும் அதிகளவு மீண்டெழும் தன்மையை வெளிப்படுத்துகின்றது.

அல்ஃபா அப்பரல்ஸ் 2006 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது முதல், தொடர்ந்தும் 2,400க்கும் அதிகமான இளைஞர்களுக்கு தமது திறன்களை வெளிப்படுத்தி தமது கனவுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுத்த வண்ணமுள்ளது. இதனூடாக 'உங்கள் கனவுகளை நனவாக்குவதற்கு சிறந்த இடம்' எனவும் அறியப்படுகின்றது.

அல்ஃபா அப்பரல்ஸ் லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான பீலிக்ஸ் ஏ. பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "எமது நிறுவனத்தின் பெறுமதி சங்கிலியுடன் தொடர்புடைய ஒவ்வொரு நபருடனும் இந்தச் சாதனையை பகிர்ந்து கொள்வதில் பெருமை கொள்கின்றோம். எமக்கு சிறந்த ஊக்கமளிப்பவர்களாக அமைந்திருக்கும் எமது ஊழியர்களிலிருந்தே இது ஆரம்பிக்கின்றது. எமது பெறுமதி வாய்ந்த வளமாக, எமது ஊழியர்கள் அமைந்திருப்பதுடன், அவர்களின் நலன் மற்றும் மகிழ்ச்சியை உறுதி செய்வதற்கான பெறுமதிகள் நிறைந்த சமமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நாம் சகல பணிகளையும் முன்னெடுக்கின்றோம். நாட்டுக்கு அந்நியச் செலாவணியை கொண்டு வரும் தொழிற்றுறையின் அங்கமாக நாம் அமைந்திருப்பது மாத்திரமன்றி, சமத்துவமான மற்றும் உள்ளடக்கமான பொருளாதார வளர்ச்சியை தூண்டி, பல்லாயிரக் கணக்கானவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த முடிந்துள்ளதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்" என்றார்.

நிறுவனத்தின் பெருமளவான வெற்றிகரமான செயற்பாடு மற்றும் வளர்ச்சியை, அதன் பெறுமதி வாய்ந்த மனித மூலதனத்தினூடாக அறியக்கூடியதாக இருக்கும். அதனை ஏற்று, தலைமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் அதில் தனித்தனியாக கவனம் செலுத்துகின்றனர். அல்ஃபா அப்பரல்ஸ் தமது ஊழியர்களுக்கு, சிறந்த பணியிடச் சூழலுடன் தொடர்ச்சியாக பயிலல், பயிற்சி, தொழில்நிலை விருத்தி வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளவும் ஊக்குவிக்கின்றது. இதனூடாக ஊழியர்கள் பணியிலும் பிரத்தியேக வாழ்க்கையிலும் அனுகூலம் பெறக்கூடியதாக இருக்கும். இலவச போக்குவரத்து வசதிகள், வீடமைப்பு, வாகன கடன்கள், தொழில்நிலை வழிகாட்டல்கள், ஆலோசனை வழங்கல் போன்ற பல வசதிகளையும் நிறுவனம் தமது ஊழியர்களுக்கு நிறுவனம் வழங்குகின்றது.

DFCC வங்கி புதிய இயல்பு சூழலில்

# தனித்துவமான இயக்கம்




DFCC வங்கி, தொற்றுப் பரவல் காரணமாக எழுந்துள்ள பல சவால்களுக்கு மத்தியிலும், தன்னுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினரையும் பாதுகாப்பதற்கும், வர்த்தகத்தை சிறப்பாக முன்னெடுப்பதற்கும் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள முயற்சிகள், தள மேடைகள் மற்றும் ஈடுபாட்டுச் செயற்பாடுகளை உள்ளடக்கிய பல நோக்கு முயற்சியில் உள்ளடங்கிய பெறுமதியைத் தோற்றுவிக்கும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

DFCC வங்கியானது உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் கவனம் செலுத்தியுள்ளதுடன், புதிய இயல்பு விதிமுறைகளுக்கு ஏற்ப, ஊழியர்களின் நலன் மற்றும் நல்வாழ்வைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. சமூக-பொருளாதார நிச்சயமின்மை நிலவுகின்ற காலகட்டத்தில், நாட்டிற்கு உதவுவதில் கவனம் செலுத்தும் வகையில் அனைத்து மட்டங்களையும் உள்ளடக்கிய பல்வேறு சமூக முதலீடுகள், ஈடுபாடுகளை வங்கி உருவாக்கி செயற்படுத்தியது.

அத்துடன், வங்கியின் வாடிக்கையாளர் வலுவூட்டல் தொடர்பான முயற்சிகள், நிதிச் சலுகைகள் மற்றும் விசேட டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகளால் உருவாக்கப்பட்ட கணிசமான பொருளாதார மதிப்பையும் வெளிக்காண்பித்தது. தொற்றுநோயால் ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாக முன்னர் ஒருபோதும் முகங்கொடுத்திராத சவால்களுக்கு மத்தியில் தொடர்ச்சியாக வணிகத்தை முன்னெடுத்தல், ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த நிலைபேறான மற்றும் புத்தாக்கமான தீர்வுகள் தேவைப்படுவதால், DFCC வங்கி அனைத்து நடவடிக்கைகளின் மையத்திலும் புத்தாக்கத்தை உறுதி செய்தது.

வங்கியானது கொவிட்-19 தொற்றுநோயின் பின்னணி மற்றும் பொது முடக்கத்தின் மூலமாக ஏற்பட்ட சமூக-பொருளாதார தாக்கத்தின் தீவிரம் மற்றும் கொடிய ஆட்கொல்லி வைரஸ் பரவல் ஆகியவற்றுக்கு மத்தியிலும், அனைத்து உள் மற்றும் வெளிப்புற பங்குதாரர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான அதன் விரிவான, பன்முகப்படுத்தப்பட்ட அணுகுமுறையுடன், திறமையான செயற்பாட்டை உறுதிசெய்து, வாடிக்கையாளர்களுக்கான சௌகரியத்தில் உயர்ந்த மட்டங்களை உறுதிப்படுத்தியமைக்காக இலங்கை பட்டய தொழில்முறை முகாமையாளர்கள் நிலையத்தால் 'புதிய இயல்புநிலையில் வணிகத்தினை மீள முன்னெடுத்தல்: சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள்' என்ற பிரிவில் முதல் 10 நிறுவனங்களில் ஒன்றாக அங்கிகாரத்தைச் சம்பாதித்துள்ளது.

சமூக மற்றும் பொருளாதார பெறுமதியைத் தோற்றுவிக்க முயற்சிக்கும் போது, வணிக தொடர்ச்சி மற்றும் பங்குதாரர்களின் நல்வாழ்வை உறுதி செய்யும் நோக்கத்துடன், மனித வளத்தை மையமாகக் கொண்ட, செயற்பாட்டு ரீதியான, வணிகத்தை மையமாகக் கொண்ட மற்றும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த முயற்சிகளை இந்த நடைமுறைகள் உள்ளடக்கியுள்ளன.

வங்கியின் அணுகுமுறை குறித்து DFCC வங்கியின் பணிப்பாளரும் / தலைமை நிர்வாக அதிகாரியுமான, திமால் பெரேரா கருத்து வெளியிடுகையில், "நாங்கள் வணிக நடவடிக்கைகளை மீண்டும் வழமைக்கு கொண்டு வரும் போது, மீளவும் எழுச்சி காண்பதற்கான எங்களின் விரிவான முயற்சிகள், இலங்கை பட்டய தொழில்முறை முகாமையாளர்கள் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அங்குரார்ப்பண 'Back to Business' விருதுகளில் அங்கிகரிக்கப்பட்டதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். அனைவருக்கும் ஏற்ற வங்கியாகவும், இலங்கையின் முதன்மையான வர்த்தக வங்கிகளில் ஒன்றாகவும் திகழும் DFCC வங்கியின் விரிவான அணுகுமுறை, அதனால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட, எதிர்காலத்தை நோக்கிய நிலைபேற்றியல் மூலோபாயத்தின் பக்கபலம் ஆகியன வங்கியுடன் ஈடுபட்டுள்ள பல பங்குதாரர்களின் வாழ்வில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதில், அனைவருக்கும் வலுவூட்டி, அனைவருக்கும் தாராளமான அளவில் சமூக மற்றும் பொருளாதார பெறுமதியைத் தோற்றுவித்து, குறிப்பிடத்தக்க வகையில் வெற்றி பெற்றுள்ளது" என்று தெரிவித்தார்.

தமிழகம்

# ஸ்டாலினுக்கு மனோ வேண்டுகோள்

"இனவரம்பில்லாமல் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உதவ வேண்டும்" என இலங்கையின் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மனோ கணேசன் தனது டுவிட்டரில், 'தமிழக முதலமைச்சரின் உதவி கரங்கள், எல்லா தமிழருக்காகவும் நீள்வதை நன்றியுடன் வரவேற்கும், அதேவேளை, இன்று இலங்கையில் நிகழும் ஏகோபித்த போராட்டங்களை அனுசரிக்கும் விதமாக முதலமைச்சரின் சமூகநீதி கரங்கள் இனவரம்பில்லாமல் எல்லா இலங்கையருக்காகவும் நீள வேண்டுமென கோருகிறோம்' எனப் பதிவிட்டுள்ளார்.





முன்னதாக இலங்கையில் வசிக்கும், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், தலைநகர் கொழும்பிலும் வசிக்கும் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் நலன் கருதி, தமிழக அரசு அத்தியாவசிப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகம் வாயிலாக அனுப்புவதற்குத் தயாராக உள்ளதாகவும், மனிதாபிமான நோக்கில் அனுப்பப்படும் இத்தகைய பொருட்களை உணவின்றித் தவிக்கும் தமிழர்களுக்கு கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் விநியோகிக்க உரிய அனுமதியையும், ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்றும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா

# கிச்சடி சமைத்தார் ஸ்கொட் மொரிசன்

இந்தியப் பிரதமர் மோடிக்குப் பிடித்த உணவான கிச்சடியை நேற்றைய தினம் (09)அவுஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொரிசன் சமைத்துள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவுடன் அண்மையில் அவுஸ்திரேலியா மேற்கொண்ட புரிந்துணர்வு வர்த்தக ஒப்பந்தத்தை கொண்டாடும் வகையில் இதனை அவர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அந்தவகையில் குஜராத் மாநிலத்தில் உள்ள சமையல் முறையைப் பயன்படுத்தி, பிரதமர் மோடிக்குப் பிடித்த கிச்சடியை அவர் தயாரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிகார்

# 60 அடி நீள இரும்பு பாலம் மாயம்

பிகார் மாநிலம், சாசரம் மாவட்டத்தில் 60 அடி நீளமுள்ள இரும்புப் பாலமொன்று மாயமாகியுள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

1972ஆம் ஆண்டு கட்டப்பட்ட சுமார் 500 தொன் எடை கொண்ட இரும்புப் பாலமே இவ்வாறு மாயமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையில் 'நீர்ப்பாசனத் துறை அதிகாரிகள் எனக் கூறிக்கொண்டு வந்த சிலர், செயற்படாமல் இருந்த அப் பாலத்தை ஜேசிபி வாகனம், கேஸ் கட்டர் ஆகியவற்றின்



உதவியுடன் 3 நாள்களாக உடைத்துப் பிரித்துக் கொண்டு சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும் இச்சம்பவமானது உள்ளூர் அதிகாரிகளின் உதவியுடனே அரங்கேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உடல் எடையை குறைத்தால் போனஸ்

## தொழிலதிபரின் கருத்தால் சர்ச்சை

பிரபல தொழில் நுட்ப நிறுவனமான செரோதாவின் இணை நிறுவனரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான நிதின் காமத் தனது ஊழியர்களின் உடல் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு, புதிய அறிவிப்பொன்றை தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார் .

குறித்த அறிவிப்பில் 'வரும் ஒகஸ்ட் மாதத்திற்குள் ஊழியர்கள் தங்களது சராசரி உடல் நிறை குறியீட்டு எண்ணை 24க்கு கீழ் கொண்டு வர முடிந்தால், நிறுவனத்தில் உள்ள அனைவருக்கும் போனஸாக மேலும் அரை மாதம் ஊதியம் வழங்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அனைத்து ஊழியர்களின் கூட்டு பிஎம்ஐ 25க்குக் குறைவாக இருந்தால், ஒவ்வொருவரும் மற்றோர் அரை மாதச் சம்பளத்தை போனஸாகப் பெறத் தகுதி பெறுவார்கள் எனவும் அத்துடன் பிற நிறுவனங்களையும் இதுபோன்ற சவால்களை முன்னெடுக்க அழைப்பு விடுத்துள்ள காமத், இருப்பதிலே குறைவான உடல் நிறை குறியீட்டு எண்ணை கொண்டவர்களோ, அல்லது அதிகளவில் உடல் நிறை குறியீட்டு எண்ணில்



மாற்றம் கண்டவர்களோ வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அவரது இந்த அறிப்பானது வரவேற்பை பெறுவதற்குப் பதிலாக, கடும் விமர்சனங்களை குவித்து வருகிறது. குறிப்பாக, 'உங்கள் போனஸை பெறப் பல ஊழியர்கள் பட்டினி கூடக் கிடக்கலாம். வெளிப்புற தோற்றத்தை அளவிடும் முன்பு, உட்புறத்தை ஆராய்ந்து பாருங்கள்' என கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில், ஜெரோதா நிறுவன ஊழியர்களின் உடல் நலனைக் கருத்தில் கொண்டே இந்தப் போட்டியை அறிவித்ததாகவும் கடந்த ஆண்டும் சிறந்த ஆரோக்கியத்திற்கான முயற்சிகளை ஊக்குவித்ததாகவும் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

# ராணி எலிசபெத்தை பின்னுக்கு தள்ளிய இந்தியப் பெண்மணி

பிரித்தானிய நிதியமைச்சரின் மனைவியும், இந்தியருமான அக்சதா மூர்த்தி தனிப்பட்ட சொத்து மதிப்பில் ராணி 2 ஆம் எலிசபெத்தை பின்னுக்கு தள்ளி முதலிடத்தை பிடித்துள்ளார்.

அதாவது இந்திய மதிப்பில் ராணி எலிசபெத்தின் தனிப்பட்ட சொத்து மதிப்பு ரூபாய் 3,500 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் தனது தந்தை நாராயணமூர்த்தியால் தொடங்கப்பட்டுள்ள இன்போசிஸில் அக்சதா மூர்த்திக்கு ரூபாய் 7,000 கோடி பங்குகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

அதோடு மட்டுமில்லாமல் அக்சதா மூர்த்தி சொந்த நிறுவனங்களிலிருந்தும் வருவாய் ஈட்டி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரித்தானியாவில் குடியுரிமை இல்லாதவர்கள் தங்களுடைய வெளிநாட்டு வருமானத்திற்கு வரி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலையில் அக்சதா மூர்த்தி தன்னுடைய கணவரின் மதிப்பு பாதிக்கப்படாத வகையில் தன் வெளிநாட்டு வருமானத்திற்கு வரி செலுத்த இருப்பதாக கூறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தகக்து.



கர்நாடகா

# உலகின் மிக உயர்ந்த ஆஞ்சநேயர் சிலை

கர்நாடக மாநிலம் துமகூரு மாவட்டம், குனிகல் தாலுகா பிதனகெரே கிராமத்தில் பசவேசுவரா மடம் உள்ளது.

இம் மடத்தில் உலகின் மிக உயரமான ஆஞ்சநேயர் சிலை எனக் கருதப்படும், 161 அடி உயரம் கொண்ட பிரமாண்ட ஆஞ்சநேயர் சிலையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ராமநவமியையொட்டி பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக


குறித்த சிலையை நேற்றைய தினம் (10) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.



பாகிஸ்தான்

# ஷரீபுக்கு வாய்ப்பு

பாகிஸ்தானின் அடுத்த பிரதமராக தேர்வு செய்யப்படுவதற்கு எதிர்க்கட்சி தலைவரான ஷபாஸ் ஷரீபுக்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட வாக்கெடுப்பு வெற்றி பெற்றதையடுத்து, அவரது தலைமையிலான அரசு கவிழ்ந்தது.

342 உறுப்பினர்களைக் கொண்ட பாகிஸ்தான் பாராளுமன்றத்தில், ஒரு கட்சி பெரும்பான்மையை பெறுவதற்கு 172 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு இம்ரான் கானின் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி, பாகிஸ்தானில் ஆட்சியமைத்து வந்தது. அதன் கூட்டணி கட்சி எம்.பிக்கள் சிலர் ஆதரவை திரும்ப பெற்றனர்.

இதையடுத்து இம்ரான் கான் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தன. இதன் மீதான வாக்கெடுப்பு நடைபெறவிருந்த நிலையில், சில நாள்களுக்கு முன்பாக இம்ரான் கானின் பரிந்துரையின் பேரில் பாராளுன்றத்தை சபாநாயகர் கலைத்தார்.

எனினும், பாராளுமன்றத்தை கலைத்தமை தவறென, உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்நிலையிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது வாக்கெடுப்பது நடத்தப்பட்டது. அதில் இம்ரான் கான் தலைமையிலான அரசாங்கம் தோல்வியடைந்தது.

சுவிட்சர்லாந்து

# குளியலறையிலிருந்து அலறிய பெண்

## பொலிஸாருக்குக் காத்திருந்த அதிர்ச்சி

சுவிட்சர்லாந்தில் சூரிச்சுக்கு வடகிழக்கில் உள்ள விண்டர்தூர் நகரைச் சேர்ந்த 50 வயதுடைய பெண்ணொருவர் அண்மையில் தனது குளியலறையில் இருந்து அலறியுள்ளார்.



இந்நிலையில் அவரது அலறலைக் கேட்ட அயலவர்கள், இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர். இதையடுத்து, உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார், அப் பெண்ணின் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது, அப்பெண்ணின் கைவிரல் குளியலறையில் தண்ணீர் வெளியேறும் துவாரத்துக்குள் மாட்டிக்கொண்டிருந்ததைக் கண்டனர்.

இதையடுத்து, பொலிஸார் அப் பெண்ணின் விரலை வெளியேற்ற முயற்சி எடுத்த போதும் அம் முயற்சி தோல்வியை சந்தித்ததால், தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பின்னர், அங்கு வந்த தீயணைப்பு துறையினர் சுமார் இரண்டு மணி நேர போராட்டத்தின் பின்னர், அப் பெண்ணின் விரலை பத்திரமாக விடுவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த பகுதிக்கு பொலிஸாரும் தீயணைப்பு படையினரும் வருகை தந்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா

# வேற்றுக் கிரகவாசிகள் மனிதர்களுடன் உடலுறவு

## அதிர்ச்சியில் உலகநாடுகள்



உலகளவில் வேற்றுக் கிரகவாசிகள் தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் வேற்றுக் கிரகவாசிகள், உலகில் வசிக்கும் சில பெண்களுடன் உடலுறவு கொண்டுள்ளதாக பிரபல ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியானது, உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க புலனாய்வுத்துறை வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இத் தகவல் வெளியிடப்பட்டு உள்ளதாகவும், தகவல் அறியும் உரிமையின் கீழ் இத் தகவல்கள் பெறப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மேலும், *'Anomalous Acute and Subacute Field Effects on Human and Biological Tissues'* என்று தலைப்பிடப்பட்ட ஆவணத்தில் இவை குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வேற்றுக் கிரகவாசிகளால் மனிதர்களுக்கு மத்தியில் ஐந்து பாலியல் சந்திப்புகள் ஏற்பட்டிருக்கலாம் எனவும், இத் தகவல்கள் அனைத்தும் பெண்டகன் ஆவணங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா

# வீடுகள் வாங்கத் தடை

கனடாவில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இரண்டு வருடங்களுக்கு வீடுகள் வாங்கத் தடை விதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளின் விலை உயர்வால் ஏற்படும் பிரச்சினைகளைக் குறைக்கும் விதமாகவே கனடா அரசு இத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் கனடாவில் இரண்டு வருடங்களுக்கு வெளிநாட்டவர்கள் வீடு வாங்குவதற்குத் தடைவிதிக்கப்பட உள்ளதுடன், தங்கள் வீட்டை ஓராண்டுக்குள் விற்பனை செய்பவர்களுக்கு அதிக வரி விதிக்கப்பட உள்ளதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் வெளிநாட்டு மாணவர்களுக்கும் நிரந்தர உரிமம் பெற்றவர்களுக்கும் பல விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.



கனடா

# வயாகராவால் ஆபத்து

வயாகரா, சியாலிஸ் போன்ற மாத்திரைகள் குறித்து கனடாவின் வான்கூவரிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அண்மையில் மேற்கொண்ட ஆய்வில் அதிர்ச்சி தரும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

குறித்த ஆய்வில், வயாகரா மற்றும் சியாலிஸ் போன்ற மாத்திரைகளை தொடர்ந்து எடுத்துக் கொள்ளும் ஆண்களுக்கு, மற்ற ஆண்களை விட கண்பார்வை பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு 85 சதவீதம் அதிகமாக உள்ளதாகத் தெரியவந்திருக்கிறது.

அதனால், வயாகரா போன்ற மாத்திரைகளை தொடர்ந்து எடுத்துக் கொள்வோர் தங்களுக்கு கண் பார்வையிலிருந்து பிரச்சினை ஏற்படுவதை உணர்ந்தால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்வகையான மாத்திரைகள், பாலின உறுப்புகளுக்கு இரத்த ஓட்டத்தை மேம்படுத்தும் அதே நேரத்தில், உடலின் மற்ற பாகங்களுக்கு செல்லும் இரத்த ஓட்டத்தை கட்டுப்படுத்துவதால் கண்களுக்கு செல்லும் இரத்த ஓட்டம் குறைவடைந்து இப் பாதிப்பு ஏற்படலாம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



கனடா

# உணவின் மூலம் பரவும் புதிய வைரஸ்

## மக்களுக்கு எச்சரிக்கை

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் அண்மையில் சேகரிக்கப்பட்ட Oysters எனப்படும் ஒருவகை சிப்பியால் நோரோ எனப்படும் ஒரு வைரஸ் தொற்று பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் கனடாவில் குறித்த சிற்பியைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட உணவானது அமெரிக்காவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவில் 90 க்கும் மேற்பட்டவர்களும் கனடாவில் 280 பேருக்கும் மேற்பட்டவர்களும் இவ் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இச்சிற்பி உணவானது உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துமே தவிர, உயிருக்கு ஆபத்தை விளைவிக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.பி.எல்

# பெங்களூரை வென்ற மும்பை

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), பூனேயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை, நிதானமான ஆரம்பத்தைப் பெற்றபோதும் ஹர்ஷால் பட்டேல் (2), ஆகாஷ் டீப், வனிடு ஹஸரங்கவிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து ஒரு கட்டத்தில் 6 விக்கெட்டுகளை இழந்து 13.2 ஓவர்களில் 79 ஓட்டங்களையே பெற்றிருந்தது. பின்னர் சூரியகுமார் யாதவ்வின் ஆட்டமிழக்காத அதிரடியான 68 (37) ஓட்டங்களால் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 151 ஓட்டங்களை மும்பை பெற்றது.

பதிலுக்கு, 152 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பெங்களூர், அனுஜ் ரவாட்டின் 66 (47), விராட் கோலியின் 48 (36) ஓட்டங்களோடு 18.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக அனுஜ் ரவாட் தெரிவானார்.

இதேவேளை, மும்பையில் நடைபெற்ற மற்றைய போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றிருந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சென்னை, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், மொயின் அலி 48 (35) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், வொஷிங்டன் சுந்தர் 4-0-21-2, தங்கராசு நடராஜன் 4-0-30-2, மார்கோ ஜன்சன் 4-0-30-1, ஏய்டன் மார்க்ரம் 1-0-8-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 155 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சண்றைசர்ஸ், அபிஷேக் ஷர்மாவின் 75 (50), ராகுல் ட்ரிபாதியின் ஆட்டமிழக்காத 39 (15) ஓட்டங்களோடு 17.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக அபிஷேக் ஷர்மா தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் குஜராத் லயன்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் எதிர்கொள்ளவுள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:


# யுனைட்டெட்டை வென்ற எவெர்ற்றன்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், எவெர்ற்றனின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை அந்தோனி கோர்டன் பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் தோற்றது. ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்டின் ஒடெகார்ட் பெற்றதோடு, பிறைட்டன் சார்பாக, லியனார்டோ ட்ரோஸார்ட், எனொக் மவெபு ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 73 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் மன்செஸ்டர் சிற்றி உள்ளதுடன், 72 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லிவர்பூல் காணப்படுவதுடன், 62 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் செல்சியும் காணப்படுகின்றது. ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ள டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், 57 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் காணப்படுகின்றது.



அக்கரைப்பற்று சம்பியன்ஸ் லீக்

# லெஜண்ட்ஸை வீழ்த்தி சம்பியனான ஹிஜ்ரா

■ நூருள் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்

கிழக்கின் கேடயம் அனுசரணையில் பல மாதங்களாக நடைபெற்றுவந்த 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அணிக்கு 11 பேர் கொண்ட அக்கரைப்பற்று சம்பியன்ஸ் லீக் கடினபந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும், அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

அக்கறைப்பற்றை சேர்ந்த ஆறு விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டி, அக்கரைப்பற்று லெஜண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அக்கரைப்பற்று லெஜன்ட்ஸ் விளையாட்டுக் கழகம், முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 118 ஓட்டங்களை பெற்றது. இதில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய முஹம்மத் றிஸாம் 59 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

பதிலுக்கு, 119 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டுக் கழகம் ஆரம்பம் முதல் அதிரடியாக துடுப்புபெடுத்தாடிவந்த நிலையில் பின்னணி துடுப்பாட்ட வீரர்கள் சுழல்பந்துகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் திணறி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தனர். இருந்தாலும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் அதிரடியாட்டம் காரணமாக 16.2 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஹிஜ்ரா விளையாட்டுக் கழகம் வெற்றியிலக்கையடைந்தது.

இத்தொடரின் தொடராட்டக்காரர் விருதை 78 ஓட்டங்களையும், 14 விக்கெட்டுக்களையும் வீழ்த்திய றோயல் அணி வீரர் அஸார் தனதாக்கி கொண்டார்.

இறுதியாட்ட நாயகனாக 40 பந்துகளுக்கு 56 ஓட்டங்களை பெற்ற அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணி வீரர் றிசாட் தனதாக்கினார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 11 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.